OS 66/2015

பி.வா.சா. 1 வேலு த/பெ கண்ணன்

நாள் 03.02.2026

**குறுக்கு விசாரணை**

1. வாதி சிவகாமி எனக்கு உறவினர் என்றால் சரிதான். வாதி எனது தகப்பனார் மீது தான் வழக்கு தாக்கல் செய்து இருந்தார் என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் இருக்கும் போது எனது தகப்பனார் இறந்து விட்டார். பச்சையம்மாள், உண்ணாமலை அம்மாள், வசந்தா ஆகியோர் எனது உடன்பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். வாதி எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது அக்கா வசந்தாவின் மாமனாரின் மகள் ஆவார். எனது தகப்பனார் படித்து இருக்கிறாரா என்றால் படிக்கவில்லை கையொப்பம் மட்டும் போடுவார். எனது தகப்பனார் விவரம் தெரிந்து கொண்டு தான் கையொப்பம் போடுவார் என்றால் நான் சொன்னால் தான் போடுவார். நான் விவரம் சொல்லி தான் என் தகப்பனார் கையொப்பம் போட்டார் என்றால் சரிதான். தாவா சொத்து எனது தகப்பனாருக்கு சொந்தமான சொத்து என்றால் சரிதான். வழக்கு சொத்தை வாதிக்கு அடமானம் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்து ஆரணி தாலுக்கா அடையபுலம் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான்.

2. அந்த சொத்தை தான் வாதிக்கு அடமானம் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அடமானம் போடும் போது நான் உடன் இருந்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ல் அடமானப்பத்திரத்தில் உள்ள கையொப்பம் எனது தகப்பனார் கையொப்பம் என்றால் சரிதான். நான் பத்தாம் வகுப்பு வரை படித்து இருக்கிறேன் எனக்கு எழுத படிக்க தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ல் அடமானப்பத்திரத்தில் போட்டுள்ள 2வது பக்கத்தில் உள்ள 2வது கையொப்பம் மற்றும் கடைசி தாளில் உள்ள 3வது சாட்சி கையொப்பமும் என்னுடையது தான் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் உள்ள விரங்களை நான் படித்து பார்த்து எனது தகப்பனாருக்கு சொன்ன பிறகு தான் அதில் என் தகப்பனார் கையொப்பம் செய்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் வெளிகடன் தீர்ப்பதற்காக ரூ.60,000/- ரொக்கமாக பெற்றுக்கொண்டு அடமான ஆவணம் எழுதி கொடுத்ததாக உள்ளது என்றால் ஆவணத்தில் அவ்வாறு தான் உள்ளது. களம்பூர் வீட்டிற்காக முன்பணம் கட்டியதற்காக எழுதப்பட்டது.

3. வா.சா.ஆ.1ல் மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு ரூ.2/- வட்டி வருடா வருடம் செலுத்துவதாக விவரம் எழுதப்பட்டுள்ளது என்றால் அதில் அவ்வாறு தான் எழுதப்பட்டுள்ளது. எனது தகப்பனார் உயிருடன் இருக்கும்போது அவருடன் வழக்கறிஞர் அலுவலத்திற்கு சென்று வருவேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக எனது தகப்பனாருடன் நீதிமன்றத்திற்கு வருவேன் என்றால் சரிதான். எனக்கு இந்த வழக்கு விவரம் எனது தகப்பனார் தாக்கல் செய்த பதில் விவரமும் தெரியும் என்றால் தெரியும். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அடமான கடன் தொகை கேட்டு வாதி சிவகாமி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த அறிவிப்புக்கு என் தகப்பனார் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் அனுப்பவில்லை. வாதி எங்களை மிரட்டி அடமான கடன் பத்திரம் எழுதி வாங்கியதாக எதிர்வழக்குரையில் விவரம் சொல்லப்பட்டுள்ளது. அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எங்களை மிரட்டியதாக வழக்கறிஞர் அறிவிப்பு ஏதேனும் அனுப்பினோமா என்றால் இல்லை.

4. என் தகப்பனார் தாக்கல் செய்துள்ள பதில் உரையை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். பதில் உரையில் எனது தகப்பனார் நான் விவசாயி என்றும் 9 சதவிகித வட்டி தான் கேட்க முடியும் என்று விவரம் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டள்ள பி.வா.சா.ஆ.1 முதல் 3 வரையிலான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை தாக்கல் செய்துள்ளோம். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் வாதியின் கையொப்பம் இருக்கிறதா என்று கேட்ட கேள்விக்கு சாட்சி திரும்ப திரும்ப பத்திரம் வாதி பெயரில் வாங்கியிருப்பதாக கூறுகிறார் நீதிமன்றம் பலமுறை அறிவுறுத்தியும் மீண்டும் அதே பதிலை திரும்ப திரும்ப கூறுகிறார். சாட்சி பத்திரத்தில் வாதியின் கையொப்பம் இல்லை என்று கூறுகிறார். பி.வா.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்களை முணியாண்டி எழுதியாக விவரம் இருக்கிறதா என்றால் அவரின் கையொப்பம் இல்லை. பி.வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணத்தை அவர் எழுதவில்லை. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தை அவர் தான் எழுதினார்.

5. வீட்டிற்காக அடமானம் எழுதப்பட்டதாக வா.சா.ஆ.1ல் விவரம் சொல்லப்பட்டுள்ளதா என்றால் அதில் எழுதவில்லை. அதில் எழுதினால் செல்லாது என்று சொன்னார்கள். வாதி என்னை மிரட்டினார் என்று சொல்வது பொய் என்றாலும் பி.வா.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்கள் நாங்கள் தயார் செய்து இருக்கிறோம் என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 முதல் 3 பொய்யான ஆவணங்கள் என்பதால் தான் பதிலுரையுடன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள கையொப்பம் வாதியின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல அவர் கையொப்பம் தான். வா.சா.ஆ.1 ரூ.60,000/- கடன் பெற்றுக்கொண்டு எழுதி கொடுத்த ஆவணம் என்றால் சரியல்ல. அடமானக்கடனை பைசல் செய்யாததால் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதியின் கடனை ஏமாற்ற வேண்டி வட்டி கொடுக்க மாட்டோம் என்றும் அசல் மட்டும் கொடுப்பதாக பொய்யான எதிர்வழக்கு நடத்துகிறோம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 முதல் 3 வரையிலான ஆவணங்கள் தாவா அடமான கடனுக்கு சம்மந்தம் இல்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. வாதியின் வழக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.